<u>**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**</u>

<u>**ஸ்ரீவில்லிபுத்தூர்**</u>

**OS.No: 17/2023** **நாள் 19.06.2026**

**பிவாசா.1, திரு.மகேஸ்வரன்**

**பி.வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

பிராது 1வது தபசில் சொத்தானது நிலமும், அதில் உள்ள தி ஓரியன் பயர் ஒர்க்ஸ் இன்டஸ்ட்ரிஸ் உள்ள கட்டிடமும் என்று சொன்னால் அது சரிதான். பிராது 2வது தபசில் 2வது அயிட்ட சொத்தில் நிலமும், அதில் ஓரியன் பயர் ஒர்க்ஸ் என்ற தொழிற்சாலையும் உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் உள்ள விபரங்களை நான் தான் என்னுடைய வழக்கறிஞருக்கு சொன்னேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மற்றும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பிராது 1வது தபசில் சொத்து எனது தகப்பனாரும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான சொக்கையா என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.அந்த பட்டாசு தொழிற்சாலை என்பது என் தாத்தா காலத்தில் இருந்தே உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பக்கம் 3 பாரா 3ல் "மேற்படி இருவரும் இறந்துவிட்ட பின்னர் மேற்படியார்களின் வாரிசுகளான நாங்கள் 7 பேர்களும் அவர் தம் குடும்பத்தார்களும் வழக்குரை தபசில் கண்ட சொத்துக்களை பொது கூட்டு குடும்ப சொத்துக்களாக வைத்து கூட்டாக அனுபவம் செய்து வந்தோம் " என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 7 நபர்கள் என்பது நானும், என் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் ஆகும். அதில் இவ்வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதி சிவக்குமார் அடங்கும் என்றால் சரிதான். ஆதியில் என் தாத்தாவுக்கு பிராது 1வது தபசில் சொத்தில் இருந்து தான் வருமானம் இருந்ததா என்று கேட்டால் 1வது தபசில் சொத்தில் இருந்தும் வருமானம் வந்தது, அது போக என் தாத்தா ஜவுளி வியாபாரம், விவசாயம் பார்த்து வந்த வகையில் வருமானம் வந்தது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும், சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் என் தாத்தா ஜவுளி வியாபபாரம் , விவசாயம் பார்த்து வந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாத்தா விவசாயம் பார்த்து வந்ததாக சொல்லும் நிலமானது என் தாத்தாவுக்கு பூர்வீகமானதா என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. விஜயரங்காபுரம் கிராமத்தில் என் தாத்தாவுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட விவசாய நிலம் இருந்தது. அந்த விவசாய நிலம் தற்போது கிடையாது. என் அப்பாவுடன் பிறந்தவருக்கு என் தாத்தா எழுதிக்கொடுத்துவிட்டார். பூர்வீக சொத்தில் ரஇருந்து வந்த வருமானத்தில் இருந்தும் பிராது 1ம் அயிட்ட சொத்தில் இருந்துவருமானத்தின் மூலமாக என் தாத்தா பிராது 2ம் அயிட்ட சொத்தை விலைக்கு வாங்கினார் என்றால் அது சரியல்ல . எனக்கு விபரம் தெரிந்த காலம் முதல் என் அப்பா பிராது 1வது தபசில் சொத்தில் உள்ள பட்டாசு தொழிற்சாலையில் தா்ன பாடுபட்டு வந்தார் என்றால் சரிதான். பிராது 2வதுஅயிட்ட சொத்தானது என் அப்பா பெயரில் வாங்கியிருந்தாலும் அது பூர்வீக சொத்தில் இருந்து வந்த வருமானத்தின் மூலமாக கிரையம் வாங்கப்பட்டது என்பதால் பிராது 2வது அயிட்ட சொத்தும் என் அப்பாவுக்கு பூர்வீக சொத்து என்றால் அது சரியல்ல. ஆனால் பிராது 2ம் அயிட்ட சொத்தானதை என் சகோதரர் திருஞானம், வீரராஜ் ஆகியோர்கள் பெயரில் என் அப்பா விலைக்கு வாங்கி கொடுத்துள்ளார். அந்த சமயத்தில் நானும், வழக்கில் உள்ள 3ம் பிரதிவாதி

சிவக்குமாரும் மைனர்களாக இருந்த போது தான் என் அப்பா மேற்படி என் சகோதரர் திருஞானம், வீரராஜ் பெயரில் கிரையம் வாங்கியள்ளார். திருஞானம் , வீரராஜ் பெயரில் என் அப்பா கிரையம் வாங்கியிருந்தாலும, நானும், 3ம் எதிர்வாதியும் வயது மூப்பு அடைந்தவுடன் அந்த சொத்தை நாங்களும் சேர்ந்து கூட்டு குடும்பமாக அனுபவித்து வந்தோம் என்றால சரிதான். 1 முதல் 3 வாதிகளின் தாயார் பெயர் விசாலட்சி. 2016ம் ஆண்டு முதல் என் சகோதரர் 3ம் எ திர்வா்தியான சிவக்குமார் என்பவருக்கும் அவரது மனைவியான 1 முத ல் 3 வாதிகளின் தாயாரான விசாலாட்சி என்பவருக்கும் இடையில் குடும்ப தகராறு ஏற்பட்டு அதனால் 2016ம் ஆண்டு முதல் என் சகோதரர் சிவக்குமார் தனியாகவும் வாதிகள் தனியாகவும் வசித்து வந்தார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அவர்களுக்குள் விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்று கேட்டால் எனக்கு தெரியாது. வழக்கில் உள்ள 3ம் பிரதிவாதி துரைச்சாமிபுரம் என்ற ஊரில் குடியுள்ளார். அவர் யாருடன் குடியுள்ளார் என்று கேட்டால் அது பற்றி எனக்கு தெரியாது. 3ம் எதிர்வாதிக்கு குடும்ப சொத்துக்களில் இருந்து நாங்கள் பணம் கொடுத்துவிட்டபடியால் பிராது சொத்துக்களில் இருந்து வாதிகளுக்கு பங்கு பாகம் இல்லை என்று எங்கள் தரப்பு கட்சியாகும். அதற்கு ஆதரவாக வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதியானவர் பிராது சொத்துக்களை பொறுத்து வாதிகளின் சகோதரரான பாஸ்கரன் என்பவருக்கு 31.07.2017ம் தேதியில் தானம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்பதாகும். இந்த தானத்திற்காக வேண்டி தான் பாஸ்கரன் என்பவருக்கு ரூ.45 லட்சம் கொடுக்கப்பட்டது என்று தான் எனது கட்சியாகும். வாசாஆ.7 ஆவணமான மேற்படி தான பத்திரத்தில் பாஸ்கரன் என்பவருக்கு ரூ.45 லட்சம் கொடுக்கப்பட்டது என்ற விபரம் சொல்லப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். வாசாஆ.7 ஆவணம் தவிர பாஸ்கரனுக்கு நாங்கள்வேறு தொகையை கொடுத்தோம் என்பதற்கு வேறு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. வேறு அந்த மாதிரி ஆவணம் இல்லை என்பதால் தான் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.7 ஆவணத்தில் தானத்திற்காக வேண்டி பணம் ரூ.45 லட்சத்தை கொடுத்ததாக நான் சொல்லும்போது மேற்படி தான பத்திரம் சட்டப்படி செல்லாது என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை படி குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பிராது சொத்தில் பங்கு பாகம் உள்ளது என்றால் வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதியான சிவக்குமாரை தவிர மற்ற எதிர்வாதிகளுக்கும் அவர்களது குடும்பத்தார்களுக்கும் பங்கு பாகம் உள்ளது. மற்ற எதிர்வாதிகளின் குடும்பத்தார்களுக்கு பங்கு பாகம் உள்ளது என்று நான் சொல்லும்போது வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதி சிவக்குமாரின் குடும்பத்தார்களான வாதிகளுக்கு பங்கு பாகம் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதியானவர் என்னிடமிருந்து தொகை ரூ.45 லட்சத்தை பெற்றுக்கொண்டு அம்பிகா பயர் ஒரக்ஸ் என்ற பெயரில் நிறுவனத்தை நடத்தி வருவதாக சொல்லியுள்ளேன். அந்த அம்பிகா பயர் ஒரக்ஸ் 3ம் எதிர்வாதிக்கு சொந்தமானது அல்ல என்று சொன்னால் அது சரிதான். நான் அவருக்கு பணம் எதுவும் கொடுக்கததால் தான் 3ம் எதிர்வாதியானவர் அந்த அம்பிகா பயர் ஒரக்ஸ் நிறுவனத்தை கிரையமாக முடிக்கவில்லை என்று சொன்னால் அப்படியில்லை அவர் அந்த இடத்தில் வாடகைக்கு இருந்து அம்பிகா பயர் ஒரக்ஸ் என்ற பெயரில் நடத்தினார். 2016ம் ஆண்டு முதல் சிவக்குமாருக்கும் அவரது மனைவியான விசாலாட்சி என்பவருக்கும் இடையில் குடும்ப பிரச்சனை இருந்து வந்த காரணத்தால் குடும்ப சொத்துக்களில் இருந்து வாதிகளிள் தாயாரான விசாலாட்சி என்பவர் ஜுவனாம்ச

உரிமை கேட்டு விடுவார் என்ற எண்ணத்தில் 3ம் எதிர்வாதியான சிவக்குமாரிடமிருந்து வாசாஆ.7 தான பத்திரத்தை நாங்கள் எழுதி வாங்கியுள்ளோம் என்றால் அது சரியல்ல. வாசாஆ.7 ஆவணத்தில் சொத்து விபரத்தில் பிராது 1ம் தபசில் சொத்தும், பிராது 2ம் தபசில் 2ம் அயிட்ட சொத்திலும் பயர் ஒர்க்ஸ் நிறுவனம் பற்றி சொல்லப்படவில்லை என்றும் நிலம் என்று தான் சொல்லியுள்ளது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் தானாக மேற்ப்டி 2 பயர் ஒர்க்ஸ் பேக்ட்ரிகளுக்கும் உரிமம் ஆனது திருஞானம், வீரராஜ், மீனாம்பிகை ஆகியோர்கள் பெயரில் உள்ளது என்பதால் வாசாஆ.7 ஆவணத்தில் மேற்படி பயர் ஒர்க்ஸ் பற்றி சொல்லப்படவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். பிராது சொத்துக்களானது பூர்வீக சொத்துக்கள் என்பதால் வாதிகளுக்கு அதில் 3/28 பங்கு பாகம் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. வாதிகளின் பங்கையும் சேர்த்து விட்டு கொடுப்பதற்கு 3ம் எதிர்வாதியான சிவக்குமாருக்கு உரிமையில்லை என்று சொன்னால் அப்படியில்லை. எனக்கும் என்னுடைய சகோதரர்களுக்கும் 3ம் எதிர்வாதி சிவக்குமாரிடம் பேச்சுவார்த்தை இல்லை. எங்களது குடும்ப நல்லது கெட்டது நிகழ்ச்சிகளுக்கு அவர் வந்து கலந்துகொண்டதும் இல்லை. எங்களுக்கும் 3ம் எதிர்வாதிக்கும் இடையில நல்ல சுமுகமான உறவு உள்ளது என்றும் 3ம் எதிர்வாதிக்கும் அவரது மனைவியான விசாலாட்சிக்கும் இருந்துவருகின்ற குடும்ப பிரச்சனை காரணமாக இவ்வழக்கில் உள்ள 1 முதல் 3 வாதிகளுக்கு பிராது சொத்தில் இருந்து பங்கு பாகம் கொடுக்ககூடாது என்ற எண்ணத்தில் நான் எதிர்வழக்காடி வருகிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 19th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.